# கொ.மு. கழகத்திற்கு எதிராக அருந்ததியர்கள்!

கள் இறக்க அனுமதி கேட்டு கொ.மு.கழகமும், கவுண்டர்களும் போராடிய போது... 'அப்படியானால் சாராயம் காய்ச்ச எங்கள் அருந்ததிய சமுதாயத்தினருக்கு அனுமதி கொடுங்கள்' என்று பிரச்சினையை திசை திருப்பியது ஆதித் தமிழர் பேரவை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்த அருந்ததியர்கள் அமைப்பான ஆதித் தமிழர் பேரவை இந்த சட்டமன்றத் தேர்தலில் 24 தொகுதிகளில் மட்டும் தனியாய் களமிறங்கவிருப்பதுதான் கோவை மேற்கு மண்டலத்தைப் பரபரக்க வைத்திருக்கிறது.

இதையொட்டி கோவை பத்திரிகையாளர் மன்றத்தில் 20 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை அறிவித்தார், ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமான். அதற்குப்பின் அவர் நம்மிடம் பேசியபோது... "எங்களுடைய இந்த முடிவு கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தினரால் எடுக்கப்பட்டது. ஆம்.. கடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்த நாங்கள் முதன் முறையாக கனத்த மனதோடுதான் தனியாய் நின்று இத்தேர்தலை எதிர்கொள்வது என முடிவெடுத்திருக்கிறோம். ஏற்கனவே இங்குள்ள காளப்பட்டியிலும், சாளரப்பட்டியிலும், வேட்டைக்காரன்புதூரிலும் அருந்ததியர்கள் மீது கவுண்டர்கள் நிகழ்த்திய வன்முறைகள் கொஞ்சமா? நஞ்சமா?

ஆண்டாண்டு காலமாய் ஆட்சி பீடத்தில் அமராமலேயே எங்கள் இனத்தவர்களை பண்ணையாளாக, அடிமைகளாக வைத்திருக்கும் இந்த கவுண்டர்கள் இப்போது தி.மு.க. கூட்டணியில் இணைந்து 7 தொகுதிகளில் நின்று பதவியில் அமர்ந்துவிட்டால் எங்கள் அருந்ததியர்களின் நிலைமையை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. மேற்கு மண்டலத்தில் நிற்கும் இந்த கவுண்டர்கள் கட்சிக்கு கலைஞரின் பெயர் எங்கள் சமூகத்தினரின் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓட்டுக்களை வாங்கிக் கொடுத்து விடும் என்ற அச்சத்தோடுதான் நாங்களே எங்கள் சமுதாயத்தினரின் ஓட்டுகளை வாங்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறோம்.

பி.சி.ஆர். சட்டத்தை எடுக்க வேண்டும் என்று தங்களுடைய முதல் மாநாட்டிலேயே தீர்மானம் போட்டவர்கள்தானே இந்த கொ.மு.க.வினர். இவர்களை தி.மு.க. இணைத்துக்கொண்டது, எங்கள் சமுதாயத்தினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. அதனால் தான் கொ.மு.க. நிற்கும் மேற்கு மண்டல தொகுதிகளில் 5 இடங்களை குறிவைத்து வேட்பாளரை இறக்கியிருக்கிறோம். தனியாய் நின்று தோல்விதானே அடையப்போகிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

இது வெற்றிக்காக நிற்பதல்ல. எங்கள் சமுதாயத்தினரின் ஓட்டுமொத்த பலத்தை அறிவதற்கான ஒரு வாய்ப்பாகவே இத்தேர்தலைப் பார்க்கிறோம். ஒரு குழந்தை பிறக்கும். தவழ்ந்து செல்லும். கீழே விழும். அடிபடும். அப்படியொரு குழந்தையான ஆதித் தமிழர் பேரவைதான் இந்தத் தேர்தல் களத்தில் பிறந்து தவழவிருக்கிறது. கட்டாயம் இந்தக் குழந்தை கொ.மு.க. என்ற கட்சியின் தோல்விக்கு காரணமாக இருக்கும்" என்கிறார் உறுதியாய். இது குறித்து கொ.மு.கழகத்தின் தலைவர் பெஸ்ட் ராமசாமியிடம் கேட்டோம். "நாங்க அருந்ததியர்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அதேபோல கொ.மு.கழகம் கவுண்டர்களுக்கான கட்சியும் அல்ல. இது கொங்கு மண்டலத்தில் உள்ள அனைத்து சமுதாயத்தினருக்குமான கட்சி என்பதை எல்லாருக்கும் நினைவுபடுத்துகிறோம். இதே கட்சியில் தலித்துகளும், இஸ்லாமியர்களும் இருக்கிறார்கள்.

பி.சி.ஆர். சட்டத்தை நீக்கவேண்டும் என்று நாங்கள் எந்த மாநாட்டிலும் தீர்மானம் போட்டதே இல்லை. பி.சி.ஆர். சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்றுதான் சொல்லியிருக்கிறோம். அருந்ததியர்கள் தேர்தலில் நிற்பது அவர்களுக்கு விடியலை ஏற்படுத்தும் என்று நினைத்தால் நிற்கட்டும். ஆனால் கலைஞரின் கூட்டணியில் இருக்கும் எங்கள் கட்சியை யாராலும் வீழ்த்த முடியாது" என்கிறார் அவரும் உறுதியாய்.

-அருள்குமார்


அதியமான்


பெஸ்ட் ராமசாமி

தேர்தல் 2011